போடு ஒரு லட்சத்து தொண்ணூறு ஆயிரம், ஒரு லட்சத்து தொண்ணூற்றைந்தாயிரம் ஆகிறது. அதிலே 150 இடங்களில் ஆரம்பச் சுகாதார நிலையம் மருந்தகம், குடியிருப்போடு கட்ட வேண்டும் என்கிறபோது ஆண்டுக்குச் சில—அவர்கள் கொடுக்கிற இடம், பத்தாயிரம் கொண்டு மருந்தகத்தைக் கட்டுவது—ஆறு படுக்கைகள் உள்ளதாக—என்று தீர்மானித்திருக்கிறோம். அந்த அடிப்படையில் செயல்படும்.

வடக்கலூர் அரிசனங்களிடமிருந்து முறையீடு

*648 வினு—திரு. என். மருதாசலம்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், அவினுசி வட்டம், வடக்கலூர் அரிசன மக்கள், அங்கு கட்டப்பட்டு வரும் பொது மண்டபம் (Community Centre) முடிக்கப் பெருமல் இருப்பது குறித்தும், தங்களுக்குக் குடியிருப்புகள் ஒதுக்குவது குறித்தும், 12—8—1973-ல் மாண்புமிகு அமைச்சரிடம் விண்ணப்பித்துள்ளனரா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) இல்லை.

(இ) வினு எழவில்லை.

மீன் வளப் பயிற்சி.

*649 வினு—திரு. அ. தேவேந்திரன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மீன் வளத்தைப் பெருக்கவும், மீன் பிடிப்பதில் புதிய முறைகளை கண்டறியவும் 1973-ல் தமிழ்நாடு அரசின் சார்பில் நார்வே, சுவீடன் போன்ற நாடுகளுக்கு யாராவது அனுப்பப்பட்டார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இல்லை.

திரு. நா. வீராசாமி: நார்வேக்கும், சுவீடனுக்கும் மீனவர்களைச் சேர்ந்த மெம்பர்களை அனுப்பிக் கேர்ந்துவரக்கூடிய வாய்ப்பு இல்லை என்று சொன்னுர்கள். இப்போது நம் நாட்டில் மீன் இலாக்கா திறமையாகச் செயல்பட்டு வருகிறது. அப்படி இருக்கும்போது சட்டசபையில் இருக்கக்கூடிய மெம்பர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி, அதன் மூலம் இந்த நாட்டின் மீன் வளத்தைப் பெருக்க நம் அரசு முயற்சிக்குமா ?

1974 மார்ச் 28]

THE HON. THIRUMATHI SATHYAVANI MUTHU: The General Foreman, Boat Building Yard, Mandapam has been deputed to Norway for training in Marine Engineering, Thiru K. C. Joseph, Assistant Director of Fisheries, Fish Meal Plant, Mandapam and Thiru S. Durairaj, Senior Research Assistant (Bacteriology) have been recommended to the Government of India for Training Course under the auspices of the FAO/DANIDA to be held in Sweden during 1974.

திரு. கு. இராசமாணிக்கம்: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் வெளி நாடுகளில் இருந்து கொண்டு வரப்படுகிற மீன்கள் வளர்ச்சி அடைவதைப் போல, நம் நாட்டில் நீண்டகாலமாக விரால் மீன்கள் இனப்பெருக்கம் தானாகவே ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த உயர்தரமான மீனை வெளி நாடுகளுக்கு அனுப்பி அறிமுகப்படுத்த அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணி முத்து: தலைவரவர்களே, சட்ட மன்றத்தில் எரால் மீன், விரால் மீன் என்ற சொல்லை தவறாகப் பத்திரிகையில் போடுகிறார்கள். எரால் என்ற வகை தான் வெளிநாட்டிற்கு அனுப்பப்படுகிறது. விரால் மீன் அல்ல. மாண்புமிகு உறுப்பினர் கூறுவது எராலா, விராலா என்று தெரியவில்லை. மறுபடியும் கேள்வியை போட்டால் விவரமாகச் சொல் கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இந்த மீன்பிடி சம்பந்தமான முற்போக்குத் திட்டங்களை தெரிந்து கொள்வதற்காக நார்வேக்கு இரண்டு பேர் இந்த வருஷம் அனுப்பப்படுவதாகச் சொன்னார்கள். அந்த இரண்டு பேரும் அபிஷியலாக இருக்கிறார்கள். இதிலே நேரடியாக ஈடுபடும் நான்-அபிஷியல்ஸ்லை அனுப்ப யோசனை இருக்கிறதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: நான்-அபிஷியல்ஸ் அனுப்புவ தாக இப்போது திட்டம் இல்லை. ஆனால் மீன் மாநில ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் அப்படிப்பட்ட ஒரு திட்டம் இருக்கவேண்டுமென்று மீனவச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். அந்தத் திட்டம் அரசின் பரிசிலனையில் இருக்கிறது.